
# கலைஞர் பல்கலைக்கழகம் குடந்தை வைத்த நாடு தரு நிதி!



தமிழின் அடையாள நதியான
காவிரிக் கரை நகரில்
'தென்னிந்தியாவின் கேம்ப்ரிட்ஜ்' ஆன
குடந்தையில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

சட்டமன்றத்தில்
அறிவித்திருக்கிறார் முதலமைச்சர்!

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்
கொண்டாட்டமாக
முதல் வேந்தராகத்
தமிழ்நாடு முதலமைச்சர்!

காலப் பேழையைக்
கவிதையால் திறந்தவர்!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற
திருக்குறள் வரியைப்
பிறந்த பின்னர் என்ற சொற்களால்
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற
கணியன் பூங்குன்றன்
காலத்தோடு நெய்தவர்!

'வாழ்நாள் முழுவதும்
தமிழ் மொழி. தமிழர் வாழ்வின்
உயர்வுக்காகப் பாடுபட்டவர்.
தமிழர் எவ்வாறு வாழவேண்டும்
தமிழ் மொழியை
எவ்வாறு போற்ற வேண்டும்.
தமிழில் எவ்வாறு
இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.
என்பதற்கெல்லாம்
அவர் ஒரு பெரும் சிகரம்"
என்று ஜார்ஜ் ஹார்ட் குறிப்பிட்ட
எங்களுக்கெல்லாம்
வழிகாட்டி. முன்னோடி என்று
ஞானபீட விருதாளர் ஜெயகாந்தனால்
பாராட்டப் பெற்ற
கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம்!

உரை ஓவியம்.
கட்டுரை. கவிதை
சிறுகதை. புதினம்.
நாடகம். திரை இலக்கியம்.
கடித இலக்கியம்.
தொலைக்காட்சித் தொடர்.
சொற்பொழிவு என்ற
பன்முக ஆளுமை கொண்ட
உலக அரசியல் தலைவர்களில்
ஒப்பிட்டுக் காண்பதற்கு அரிய

முத்தமிழ் அறிஞர் பெயரில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

குடந்தை. குடமூக்கு
ஒரு காலத்தில் சோழர்களின் தலைநகர்!
பிறகு கும்பகோணம் ஆகியிருக்கிறது!

உலக அளவில் வெற்றிலை பாக்கும்
உள்நாட்டில்
பட்டு நெசவும் டிகிரி காபியுமாக
வலம் வருகிற கும்பகோணத்தில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

கணித மேதை
இராமானுஜத்தையும்
சீனிவாச சாஸ்திரியையும்
மட்டுமின்றி
மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்
பிள்ளையையும்
அவரது மாணவர்
தமிழ்த் தாத்தா உ.வே.சா.வையும்
நினைவுபடுத்தும் மாநகரில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

அப்பர். சம்பந்தர் மட்டுமின்றி
ஆண்டாள். பெரியாழ்வார்.
திருமங்கையார். பூதத்தாழ்வார்களாலும்
பாடப்பெற்ற திருத்தலத்தில்
மதத்தில் புரட்சி செய்த
மகான் இராமானுஜர் பற்றித்
தொலைக்காட்சித் தொடர் தந்த
கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம்!
கு.ப.ரா.. கரிச்சான் குஞ்சு. தி.ஜானகிராமன்
எம்.வி. வெங்கட்ராம் போன்று
தமிழை நவீனப்படுத்தியவர்களின்
கதைக் களத்தில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

மகாமகக் கொடுமைகளைக் கடந்து
சைவ. வைணவ. சமணக்
கோயில்களோடு
பௌத்த கோவிலுமாகச்
சமய நல்லிணக்கம் தரும்
கோயில்களின் மாநகரில்
அறிவாலயமாகக்
கலைஞர் பல்கலைக்கழகம்!

நான்கு வேதங்களையும் கற்பிக்க
1542 இல் வேத பாட சாலை
தொடங்கப்பட்ட நகரில்

"அய்யன் வள்ளுவரின்
அடிதொடரச் சூள் உரைப்பீர்
உய்ய வழி வேறில்லை
திருக்குறளைத் தோள் சுமப்பீர்" என்ற
கலைஞரின் பெயரில் பல்கலைக்கழகம்!

சென்னை மாகாணத்தின்
பழமையான கல்லூரியாக
1867 இல் தொடங்கப்பட்ட
கலைக்கல்லூரி நகரில்
கல்லூரிக் கல்விக் கொள்கையை -
பாடத்திட்டத்தை உருவாக்கிய நகரில்
புதிய கல்விக் கொள்கையை மறுத்துத்
தமிழ்நாட்டுக்கான
கல்விக் கொள்கையை உருவாக்கும்
தமிழ்நாடு முதல்வரால்
கலைஞர் பல்கலைக்கழகம்!

உலகம் அழியும்
பிரளயக் காலத்தில்
படைப்பாற்றலை
இமய மலை உச்சியில்
பிரமன் வைத்த குடம்
தரையில் இறங்கியதாகப்
புராணம் சொல்லும் நகரில்
செம்மொழி மாநாட்டின் வழி
தமிழின் படைப்பாற்றலை
உலகில் தலைநிமிர வைத்த
கலைஞரைக் கொண்டாடப்
பல்கலைக்கழகம்!

வெற்றி பெற்ற சோழர்
கிடைத்த நிதியைப்
பாதுகாப்பாக வைத்த இடம்
குடந்தை என்று
அகநானூற்றில் (60)
"கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதி" என்று
குடவாயில் கீரத்தனார் பாடுகிறார்.
ஆம்! இப்போதும்
தமிழ்நாடு முதல்வர்
வேந்தராக
உச்சமன்றத்தின் வழியாகப்
பெற்ற வெற்றியை
நாடுதரு நிதியாகக்
கொண்டாடிப் பாதுகாக்கும் விதமாகக்
குடந்தையில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

அன்புடன்



ம.ரா.

---



மே தினத்தை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. விழுப்புரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பணியாளர்களுக்கு இனிப்புகளை வழங்கி உழைப்பாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், தொமுச பொதுச் செயலாளர் வி.சேகர், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நிர்வாக பணியாளர் முன்னேற்றச்சங்க பொதுசெயலாளர் வாலிபால்.மணி, தலைவர் ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு வி.இராஜா, பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, நகர பொருளாளர் இளங்கோ, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஸ்ரீ வினோத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ர.சதிஷ் உள்ளிட்ட மத்திய சங்க கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### மாநில முதல்வர்கள் பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கலாம் - தீர்ப்பை பெற்றுத்தந்த முதல்வருக்கு பாராட்டு விழா:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!





சென்னை, மே 3-
சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 01.05.25, வியாழக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி மகாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பி.கே. மூர்த்தி, எம். விஜயகுமார், சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, எம்.பி.எம்.ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகி கள்: தேவ ஜவகர், ஜி.மகாதேவன், புனித வதிஎத்திராசன், இசட்.ஆசாத் பகுதிக் கழக செயலாளர்கள்:கூ.பி. ஜெயின், வே. வாசு,செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.முனியாண்டி, இரா.நரேந்திரன், என்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராக வன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, க.நந்தீஸ்வரன். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: J.பாலமுருகன், S. தனசேகர், க.வினோத், ஜி. ஜே.பிரபு, வானவில்விஜய், L.P.F. மோகன், பி.ஸ்ரீராமுலு, ஜி.தாமோதரன், எம்.பிரோஸ் கான், P.விஜயகுமார், எம். விநாயகம், து.ஆயிரம், இரா. வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், ஆர்.எஸ்.சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர். ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தீர்மானங்கள்:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்த சில முக்கியமான சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் திருப்பி அனுப்பிய நிலையில் அதனை மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய போதும் இவற்றிற்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தியதால் உச்ச நீதிமன்றத்தை நாடி ஆளுநர் சட்ட முன் வடிவுகளை நிறுத்தி வைத்திருப்பது சட்ட விரோதமானது என்றும் அந்த சட்ட முன் வடிவுகளை ஆளுநர் ஒப்புதல் அளித்ததாக கருதப்பட வேண்டும் என்ற வரலாற்று தீர்ப்பைப் பெற காரணமாக இருந்த கழக தலைவர் முதல்வரை இக்கூட்டம் மனமார வாழ்த்தி பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

ஒன்றிய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராயக்குழு. உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன பதவிகள் உருவாக்க திட்டம். வக்ஃப் திருத்த மசோதாவுக்கு எதிரான தீர்மானம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான 9 முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றம்.

கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் மேலும் தகுதியுள்ள மகளிருக்கு உரிமை தொகை. ஏழை எளியவர்களின் கடன் தொகையை வலுக்கட்டாயமாக வசூலிக்க கூடாது என்ற சட்டம். காலனி என்ற சொல் அரசு ஆவணங்களிலிருந்து நீக்க நடவடிக்கை என நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றிய முதல்வரை வணங்கி பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

நீட் தேர்வின் காரணமாக தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட சகோதரி அனிதா அவர்களின் பெயரிலே அனிதா அச்சிவர்ஸ அகடாமி.

இலவச கண் சிகிச்சை மற்றும் கண் அறுவை சிகிச்சை மருத்துவமனை.

**முதல்வர் படிப்பகம்**

மாநகராட்சி பள்ளியிலே படிக்கின்ற 10, 11, 12 ஆம் வகுப்பு அந்த மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக "முதல்வர் கல்விச் சோலை" என்கின்ற சிறப்பு வகுப்புகள் என பல்வேறு திட்டங்களை தந்து கொளத்தூர் தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றிய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

03.05.2025சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் "மாநில முதல்வர்கள் பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கலாம்" எனும் உரிமையினை மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் மூலம் போராடி பெற்று தந்த உத்தமத் தலைவர் மாநில சுயாட்சி நாயகர் முதலமைச்சர் அவர்களை பாராட்டி கல்வியாளர்கள் இணைந்து நடத்தும் விழாவிற்கு ஏற்புரையாற்ற வருகை தரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க உறுதி ஏற்று தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்டத்தில் மே தின விழா நலத்திட்ட உதவிகள்!

## மாத்தூர் கா. தாமரைச்செல்வன் பங்கேற்பு!

மாதவரம், மே 3-
சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், மாத்தூர் 19வது வட்டத்தில் மே தினத்தை முன்னிட்டு தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 19 ஆவது வட்டம் மாத்தூர் எம் எம் டி ஏ முதல் பிரதான சாலையில் உள்ள எல்பி எஃப் ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தில் மே தின விழா கொண்டாடப்பட்டது.

19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் கொடியை ஏற்றி வைத்தார். பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கலைஞர் வாழ்க, தளபதி வாழ்க, உதயநிதி ஸ்டாலின் வாழ்க, தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக என கோசமிட்டு தொழிலாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் ஆட்டோ ஓட்டுநர்கள் அனைவருக்கும் அரிசி, ரொக்கம் ஆகியவற்றை கழக நிர்வாகிகள் வழங்கி மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ்,பகுதி மகளிர் அணி அமைப்பாளர் எஸ். சுகாசினி, துணை அமைப்பாளர் ஆர். சரஸ்வதி, பகுதி மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கஸ்தூரி, பெரியநாயகி, கழகத்தின் மூத்த முன்னோடிகள் சின்ன மாத்தூர் இரா.குகன்,மாத்தூர் கே.குமார், ICF சிவப்பிரகாசம், பாக முகவர் நெடுஞ்செழியன், கலைச்செல்வி, சரசு, பன்னீர் செல்வி, முகமது முஸ்தபா, பி. சிவராமன், சாய் சந்திப்

எல் பி எஃப் ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் சத்தியசீலன், காமராஜ், வேலுச்சாமி, வெங்கடேசன், கார்த்திக்,ஜமா உசேன், பேன்சி பா. ரமேஷ், சரவணன், தேவேந்திரன், பாலாஜி, சுகுமாரன், டி. கார்த்திக், பிரதாப், சந்திரன் சூரிய பிரகாஷ், நித்தியானந்தம், சுதந்திரபாபு,சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

கழகத் தோழர்கள் அனைவரும் தொழிலாளர் தோழர்களுக்கு மே தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள். மேலும் உழைக்கும் தொழிலாளர்களுக்கு துணை நிற்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு தங்களது ஆதரவு தொடர்ந்து வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிப்போம் என ஆட்டோ ஓட்டுனர் சங்க நிர்வாகிகள் உறுதி அளித்தார்கள்.





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், மாத்தூர் 19 ஆவது வட்டம் இரண்டாவது பிரதான சாலையில் உள்ள ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தில் மே தின விழா கொண்டாட்டம் 19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. எல்பி எஃப் ஆட்டோ ஓட்டுனர் சங்க கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி, ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். உதயகுமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், சுகாசினி, சரஸ்வதி, கஸ்தூரி, பெரியநாயகி, சின்ன மாத்தூர் குகன், மாத்தூர் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.